3rd November 1965]

(இ) எந்தெந்த பாடங்கள் தமிழில் நடைபெறுகின்றன ?

(ஈ) ஒவ்வொன்றிலும் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Tamil medium of instruction has been introduced in the following 5 colleges in the subjects noted against them :—

(1) Government Arts College, Coimbatore—History, Economics, Politics, Geography and Psychology.

(2) P.S.G. Arts College, Coimbatore—Economics and Social Science.

(3) N.G.M. College, Pollachi—History.

(4) Sri Avinashilingam Home Science College for Women, Coimbatore—Economics.

(5) Government Arts College, Kumbakonam—Economics.

(*c*) It is too early to collect the particulars.

புலவர் கா. கோவிந்தன் : தமிழ்ப் பயிற்சித் திட்டம் கோவை மாவட்டத்திலும், கும்பகோணத்திலும் மட்டும்தான் இருக்கிறது. சென்னையில் அந்த ஒரு நிலைமை ஏன் கொண்டு வரப்படவில்லை ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சென்னையிலும் அந்தத் திட்டத்திற்கு இடம் இருக்கிறது. கவர்ன்மெண்ட் ஆர்ட்ஸ் காலேஜ், க்வீன் மேரீஸ் காலேஜ் இரண்டிலும் இருக்கிறது.

Tax on Motor Vehicles

* 241 *Q.*—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that a surprise check of permits, licences, etc., of motor vehicles was made by the Transport Commissioner on 18th January 1965 near Erode;

(*b*) the number of vehicles found to be plying without licences, permits, etc. ; and

(*c*) the action taken against the owners?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) A statement [a] is placed on the table of the House.

(c) Action is being taken against the owners and drivers by the authorities concerned, and reports are awaited.

திரு. ஜே. மாதா கவுடர் : இந்தக் குறிப்பிலே 'வரியைக் குறைவாகச் செலுத்தல்' என்றிருக்கிறது. வரியை எப்படிக் குறைவாகச் செலுத்த முடியும் ? வரி வாங்கும்போது இந்த மோட்டாருக்கு இவ்வளவு வரி வாங்கவேண்டுமென்று இருக்கிறது. வரி குறைவாகச் செலுத்தினால் இவ்வளவு கொடுக்கவேண்டுமென்று சொல்லி அதை வாங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

---

a Printed as Appendix II on page 125 infra.

[3rd November 1965

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பாசஞ்சர்கள் குறைவாக இருந்தால் அதற்குக் குறைவு என்று இப்படிப் பல திட்டங்கள் உள்ளன. ஆகவே, பாசஞ்சர்கள் எண்ணிக்கை குறைவாக உள்ளது என்று குறைத்துக் கொடுத்திருக்க முடியும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: வரி கொடுக்காமல் ஓட்டிய வண்டிகள் 209 என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் டிரான்ஸ்போர்ட் பஸ்கள் எத்தனை? மற்ற வண்டிகள் எத்தனை? அதாவது ப்ரைவேட் எத்தனை?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மென்ட் பணம் கொடுக்காமல் ஓட்டுவதில்லை. எத்தனை லாரிகள், எத்தனை பஸ்கள் என்று தனித்தனியாகக் கணக்கு இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்கிறேன்.

திரு. து. ப. அழகமுத்து: இந்தப் பதிலில், ஆன்-ஆதரைஸ்ட் ரூட்டில் போன வண்டிகள் இத்தனை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் எத்தனை பஸ்கள், எத்தனை லாரிகள் என்று அறியலாமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தனியாகக் கேள்வி போட்டால் கண்டு பிடித்துச் சொல்கிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி: 'பிற முறைகளில்' 835 என்று போட்டிருக்கிறது. அன்-ஆதரைஸ்ட், ஓவர்லோட் என்று தனியாக எண்ணிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே பிற முறைகள் என்பது என்னென்ன குற்றங்களைக் குறிக்கின்றன என்பதை விளக்குவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மோட்டார் வெகிகிள்ஸ் டாக்ஸேஷன் ஆக்டில் பலவிதமான குற்றங்கள் பற்றி எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. க்ளாசிபை செய்தது போக பாக்கியுள்ளவை 'பிற முறைகள்'.

திரு. செ. மாதவன்: கோவை மாவட்டத்தில் ஜனவரி 18-ம் தேதி பிடிக்கப்பட்டிருக்கிறது. ஆர். ஸி. புக் இல்லாதது, டிஸ்க் இல்லாதது என்று ஆர்.டி.ஓ. காட்டியிருக்கிறார்கள். பணம் செலுத்தப்பட்டிருந்தாலும் அந்த புக் வண்டியில் இல்லாததுதான் எக்கச்சக்கமாகப் பிடித்திருக்கிறார்கள். அது உண்மையா என்பது பரிசீலிக்கப்பட்டதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்த மாதிரித் தகவல் சர்க்காருக்கு வரவில்லை. ஆனால், நாம் பிடித்த எல்லா கேஸ்களுக்கும் ப்ராசிக்யூஷன் போடவில்லை. அதையெல்லாம் பரிசீலனை செய்து எந்த லாரிகள், எந்த பஸ்கள் இவைகளுக்கு வரி கொடுக்கவில்லை என்று தீர்மானிக்கப்பட்டதோ, அவைகள் பேரில்தான் ஆக்ஷன் எடுக்கிறோம். வரி கொடுத்துவிட்டு அது கணக்கிற்கு வராமல் இருந்தால், அவைகளின் பேரில் ஆக்ஷன் எடுப்பதில்லை.

3rd November 1965]

திரு. எஸ். ஜெ. ராமசாமி : வரி செலுத்தாதது 209 என்றிருக்கிறது. ஒரு பஸ்ஸுக்கு எவ்வளவு வரி செலுத்தவேண்டுமென்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தந்த பஸ்ஸைப் பொறுத்தது. கப்பாசிட்டி எவ்வளவு, எத்தனை சீட்கள் இருக்கின்றன என்பதைப் பொறுத்தது.

புலவர் கா. கோவிந்தன் : வழங்கப்படாத மார்க்கங்களில் ஓட்டுவது, வழங்கப்படாத ட்ரிப்ஸ் ஓட்டுவது என்பது வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில்தான் அதிகமாக நடக்கிறது. அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது நாம் எடுத்த திடீர் சோதனைகள்தான் இதைத் தடுப்பதற்கான வழிகள். இதை ஜில்லாவாரியாக அவ்வப்போது பார்த்துச் செய்து கொண்டு வருகிறோம்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : சர்க்கார் பஸ்களை சோதனை செய்து பார்க்க டிரான்ஸ்போர்ட் கமிஷனருக்கு அதிகாரமிருக்கிறதா ? அப்படி ஏதாவது சோதனை செய்து பார்த்தார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எது சம்பந்தமாக ?

திரு. பி. கே. மூக்கையா தேவர் : லைசென்ஸ், டாக்ஸஸ் சம்பந்தமாக.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : லைசென்ஸ், டாக்ஸஸ் பற்றி எல்லாவற்றிற்கும் சலான் போட்டு மொத்தமாகக் கட்டிவிடுகிறார்கள். தனித்தனியாகக் கட்டுவதில்லை. பஸ்ஸைப் பார்த்துக் கண்டு பிடிக்கவேண்டிய அவசியமில்லை. சலானைப் பார்த்தால் இந்த நாளில் இவ்வளவு லட்சம் Treasury -ல் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், ஒரு நாள் மட்டும் சோதனை போட்டதிலேயே இத்தனை வண்டிகள் வரி கொடுக்கவில்லை என்பதைக் கண்டு பிடிக்க முடிந்திருக்கிறது. இதிலிருந்து அந்த ஜில்லாவில் இதைக் கண்காணிக்கின்ற நிர்வாகத்தில் குறைபாடு அல்லது ஊழல் இருக்கிறது என்று ஊகிக்கலாமா ? அப்படியிருந்தால் இதை நிவர்த்திப்பதற்கு என்ன பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஏராளமான வண்டிகள் ஓடுகின்ற இடத்தில் சோதனை போட்டால் இவ்வளவு தவறுகள் இருக்கத்தான் செய்யும். இதை வைத்துக்கொண்டு நிர்வாகத்தில் தவறு இருக்கிறது அல்லது ஊழல் இருக்கிறது என்று சொல்லிவிட முடியாது. எந்த இடத்திலும் சரியான கண்காணிப்பு இருந்தால் தான் சட்டத்தை நல்ல முறையில் அமல் நடத்த முடியும். ஆகவே தான் கண்காணிப்பு நடவடிக்கைகளை அதிகரித்துக்கொண்டு வருகிறோம்.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட குற்றங்களை நிரூபித்த பின்னுல், இப்படிப்பட்ட குற்றங்களைச் செய்தவர்களுக்கு மேற்கொண்டு ரூட், பெர்மிட் இவைகள் கொடுப்பதில்லை என்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த மாதிரி அதிகாரம் நமக்கு இருக்கிறதா என்பது சந்தேகம்.

திரு. எம். எஸ். மணி : ஸார், அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள கணக்கில் "போகஸ் டாக்சி"கள் கண்டுபிடித்திருப்பதும் சேர்க்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்காகத் தனியாகச் சோதனை நடந்தது. இதோடு சேர்த்து நடத்தப்படவில்லை. அன்-ஆதரைஸ்ட் டாக்சிகள் எத்தனை ஓடுகின்றன என்பதற்குச் சோதனை போட்டுக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. தனியாகக் கேள்வி கேட்டால் தேதி, விவரங்கள் எல்லாம் கொடுக்க முடியும்.

திரு. ர. ஜீவரத்தினம் : "போகஸ் டாக்சி" என்று கண்டுபிடிக்கின்ற விஷயத்தில் சர்க்கார் இன்னும் கொஞ்சம் பரிசீலனை செய்யவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். சிலர் நண்பர்களுடைய வண்டியை எடுத்துக்கொண்டு போனுல் கூட, அதை போகஸ் டாக்சி என்று நடவடிக்கை எடுத்துவிடுகிறார்கள். இவ்விதம் நடவடிக்கை எடுத்து சார்ஜ் செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அகப்படாமல் இருக்கும் வரையிலும் பிரைவேட் டாக்சியாக இருக்கிறது, அகப்பட்டவுடன் நண்பர்களுடைய வண்டி என்று சொல்லிவிடுகிறார்கள். இதுதான் நாம் எங்கும் பார்க்கும் காட்சி. உண்மையிலேயே நண்பர்களுடைய வண்டியாக இருக்குமானுல், நடவடிக்கை எடுக்க மாட்டார்கள். தவறான வழியில் வண்டி ஓடிக்கொண்டிருந்தால், நடவடிக்கை எடுப்பார்கள்.

காவேரி நீரோட்டத்திலிருந்து மின்சாரம்

* **242 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :**
திரு. வை. சங்கரன் } கனம் கைத்தொழில்
திரு. மு. கருணாநிதி :
அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காவேரி நீரோட்டத்திலிருந்து மின்சாரம் எடுப்பதற்கான திட்டம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Board is examining the possibility of developing power from the Cauvery below Mettur utilising the fall between Mettur and the Grand Anicut.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்தப் பரிசீலனையிலிருந்து என்னென்ன விவரங்கள் தெரிய வந்திருக்கின்றன ?